# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 197 | செவ்வாய்க்கிழமை Tuesday | 13.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ஆந்திரா செல்லும் முதலமைச்சர் விஜய்

## முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, துணை முதலமைச்சர் பவன் கல்யாண் ஆகியோரை சந்திக்கத் திட்டம்



விஜயவாடா கனக துர்கா கோவிலுக்குச் செல்லும் தமிழக முதல்வர்விஜய்,ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவைச் சந்தித்து நதிநீர் குறித்துப் பேசுகிறார்.

தமிழ்நாடு அரசியல் களத்தில் புதிய சகாப்தத்தைப்படைத்து,கோட்டையைக் கைப்பற்றியுள்ள தமிழக முதலமைச்சர் விஜய், தற்போது அண்டை மாநிலமான ஆந்திரா நோக்கித் தன் பார்வையைத் திருப்பியுள்ளார். ஆந்திரா பயணம் மேற்கொள்ள உள்ள அவர் விஜயவாடாவில் உள்ள உலகப் புகழ்பெற்ற கனக துர்கா தேவி கோவிலில் சிறப்புச் சாமி தரிசனம் செய்ய உள்ளார்.

ஆந்திர அரசின் சார்பில், விஜயவாடா எம்பி கேசினேனி சிவானாத் (சின்னி) தலைமையிலான குழுவினர் சென்னைக்கே வந்து முதலமைச்சர் விஜய்க்கு அதிகாரப்பூர்வ அழைப்பு விடுத்திருந்தனர்.

அந்த அழைப்பை ஏற்று,கிருஷ்ணா நதிக்கரையில் கம்பீரமாக வீற்றிருக்கும் ஸ்ரீ துர்காமல்லேஸ்வர சுவாமி (கனக துர்கா) கோவிலுக்கு விஜய் செல்லவுள்ளார்.

முற்காலத்தில் உக்கிரமாகஇருந்த இந்த சுயம்பு அம்மனை, ஆதிசங்கரர் தான் 'ஸ்ரீ சக்கரம்' நிறுவி சாந்தப்படுத்தினார் என்பது வரலாறு.

எதிரிகளைவீழ்த்தவும், தொட்ட காரியங்களில் இமாலய வெற்றி பெறவும் இந்த அன்னைக்குச் 'சண்டி யாகம்' செய்து வழிபடுவது அரசியல்வாதிகளின் வழக்கம்.

அதேபோல், மகாபாரதத்தில் அர்ஜுனன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து பாசுபதாஸ்திரம் என்ற அஸ்திரத்தைப் பெற்றதும் இதே இந்திரகீலாத்ரி மலையில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தன் வாழ்வின் அடுத்தடுத்த வெற்றிகளுக்காக இந்த 'வெற்றி தரும் அன்னை' கனக துர்காவை விஜய் சரணடையப் போவதாக சிலிர்ப்போடு பேசுகின்றனர்.

ஆன்மீகத் தரிசனம் ஒருபுறம் இருக்க, ஆந்திராவின் கலாச்சாரப் பெருவிழாவான 'விஜயவாடா உத்சவ் 2.0' (Vijayawada Utsav Season 2) நிகழ்விலும் விஜய் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

புன்னமி காட்டில் பிரம்மாண்டமாக நடக்கும் இந்த விழாவில், லேசர் ஷோக்கள் மற்றும் ஆந்திர பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் அரங்கேறுகின்றன.

இந்த ஒற்றைப் பயணத்தில் ஆன்மீகத்தைத் தாண்டி, மிக முக்கிய அரசியல் நகர்வுகளும் அடங்கியுள்ளன:

சந்திரபாபு நாயுடுவுடன் சந்திப்பு: ஆந்திரா சென்றடையும் விஜய், அம்மாநில முதலமைச்சர் நாரா சந்திரபாபு நாயுடுவை நேரில் சந்தித்துப் பேசுகிறார்.

கிருஷ்ணா நதி நீர் விவகாரம்: இந்தச் சந்திப்பின் போது, சென்னைக்கு வழங்கப்பட வேண்டிய 'தெலுங்கு கங்கை' கிருஷ்ணாநதி நீர் பங்கீடு தட்டுப்பாடு குறித்தும், கோதாவரி - கிருஷ்ணா - காவிரி நதிநீர் இணைப்புத் திட்டங்கள் குறித்தும் விஜய் மிக முக்கிய இருதரப்பு ஆலோசனைகளை நடத்த உள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

பவன் கல்யாணுடன் சந்திப்பு? சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்து ஆந்திராவின் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள பவன் கல்யாணையும் விஜய் சந்திக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுவதால், இந்தத் தெலுங்கு-தமிழ் 'ஸ்டார் அரசியல்' சந்திப்பு ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் வரலாற்றில் விஜயவாடா கனக துர்கா அம்மன் கோவில் என்பது மிக முக்கியமான திருப்புமுனைத் தலமாகும்.

இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு இதேதசராவிழாவில் பங்கேற்க இங்கு வருகிறார்.

தெலுங்கானா தனி மாநிலமாகஉருவானால் அம்மனுக்குத்தங்கமூக்குத்தி செலுத்துவதாக வேண்டிக்கொண்ட முன்னாள் முதல்வர் கே. சந்திரசேகர் ராவ் (KCR), தான் நினைத்தது நிறைவேறியதும் ரூ. 4.5 லட்சம் மதிப்புள்ள தங்க மூக்குத்தியை இங்கு வந்து காணிக்கையாகச் செலுத்தினார்.

தமிழக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் தற்போதைய தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி உள்ளிட்டோரும் தங்களின் அரசியல் வாழ்வில் திருப்பங்கள் ஏற்பட இந்த அம்மனின் பாதங்களை நாடி வந்தவர்களே!

# இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற மதுராந்தகம், தாராபுரம் எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்பு



சென்னை: மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் மரகதம் குமரவேல் மற்றும் சத்தியபாமா ஆகியோர், சட்டப்பேரவைத் தலைவர் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில்அதிமுகசார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் மற்றும் சத்தியபாமா ஆகியோர், தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு,தமிழகவெற்றிக் கழகத்தில் இணைந்தனர்.இதன் காரணமாக, அந்த இரு தொகுதிகளிலும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, கடந்த அக்டோபர் 6-ஆம் தேதி இரு தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடைபெற்றது. இதற்கான வாக்குஎண்ணிக்கை அக்டோபர் 9-ஆம் தேதி நடைபெற்று, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. , மதுராந்தகம்தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட மரகதம் குமரவேல் சுமார் 20,040 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதேபோல், தாராபுரம் தொகுதியில் போட்டியிட்ட சத்தியபாமா சுமார் 9,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இருவரும் வெற்றிச் சான்றிதழ்களைப் பெற்றனர். இந்நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டப்பேரவைத் தலைவர் ஜெ. சி.டி. பிரபாகர் முன்னிலையில் இருவரும் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சியில்சட்டப்பேரவை முன்னவர் செங்கோட்டையன், தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அரசியல்

பொதுத்தேர்தலில் வெற்றிபெறும்சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுவாகச் சட்டப்பேரவையில் பதவியேற்பது வழக்கம். ஆனால், இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் மற்றும் சத்தியபாமா ஆகிய இருவரும் தலைமைச் செயலகத்தில் சட்டப்பேரவைத் தலைவர் முன்னிலை யில் தற்போது பதவியேற்றுக் கொண்டுள்ளார். இதன் மூலம் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளின் புதிய சட்டமன்ற உறுப்பினர்களாகஇருவரும் தங்களது பணிகளைத் தொடங்க உள்ளனர்.

# உச்சநீதிமன்றம் நோக்கி பேரணி: ராகுல், நேஹா உள்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு



புதுடெல்லி: தலைமைத்தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் ராஜினாமா செய்ய வலியுறுத்தி, இண்டியா கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கானதொண்டர்கள் உச்சநீதிமன்றத்தை நோக்கிய பேரணியைத் தொடங்கியதால், மத்திய டெல்லி பகுதி முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் சமாஜ்வாதிதலைவர்அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த 'ஜனநாயகத்துக்கான பேரணி', டெல்லியின் முக்கியப் பகுதிகளான பரகம்பா சாலை மற்றும் மண்டி ஹவுஸ் ஆகியவற்றில் போக்குவரத்தை முடக்கியது.

எஸ்ஐஆர் பணிகளில் முறைகேடுகள் நடந்ததாகக் குற்றம் சாட்டும் போராட்டக்காரர்கள், தேசியக் கொடிகள் மற்றும் பதாகைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பினர். இந்தப் பேரணியில் அகில இந்திய மாணவர் சங்கத்தின் தலைவர் நேஹா போராவும் பங்கேற்றுள்ளார்.

இண்டியா கூட்டணியின் தலைவர்கள் முதலில் பரகம்பா சாலை சந்திப்பில் கூடினர். பின்னர் உச்ச நீதிமன்றத்தை நோக்கி ஊர்வலமாக புறப்பட்டனர். அங்கு, எஸ்ஐஆர் பணியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்த மனுவைச் சமர்ப்பிக்கவும், ஞானேஷ் குமார் மீது நடவடிக்கை எடுக்கக் கோரவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

காங்கிரஸ் எம்.பி. அமரிந்தர் சிங் ராஜா வாரிங், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்தை சந்திக்க கோரிக்கை விடுத்தார். "இந்தியத் தலைமை நீதிபதி எங்களைச் சந்திக்காவிட்டால், மக்களின் குறைகளை யார் கேட்பார்கள்? அவர் எங்களைச் சந்திக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்" என்று அவர் கூறினார்.தலைமைநீதிபதி சூர்ய காந்த், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கோரியிருந்த சந்திப்புக்கான வேண்டுகோளை நேற்று (அக்.11) நிராகரித்தார். ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருப்பதால் இந்தச் சந்திப்பு மறுக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், நிர்வாக ரீதியிலான அரசின் செயல்பாடுகள் மற்றும் ஆளுகை தொடர்பான விஷயங்களில் நீதிமன்றம் தலையிட முடியாது என கூறப்பட்டதாகவும் தெரிகிறது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கடையநல்லூர் அரசு கலைக் கல்லூரியில் மாணவர்களுக்கு நிலவேம்பு குடிநீர்

## நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் வழங்கப்பட்டது




தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் நாட்டு நலப்பணி திட்டம் அணி எண் 007 மூலம் நிலவேம்பு கசாயம்வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் கே ஆர் பீர்முகமது தலைமை தாங்கினார்கல்லூரி முதல்வர் தற்போது கடையநல்லூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் காணப்படும் காய்ச்சல் குறித்து மாணவ மாணவிகளிடம்எடுத்துரைத்து நிலவேம்பு கசாயத்தின் அருமைகளை அதனால் ஏற்படும் பயன்களை எடுத்துக் கூறினார்கல்லூரி முதல்வர் கொடுத்த அறிவுரையின்படி கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளும் நிலவேம்பு கசாயம் அருந்தினர் இது குறித்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் பால்மகேஷ் அவர்கள் கூறும்பொழுது நிலவேம்பு குடிநீர் என்பது சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாரம்பரிய கசாயம் ஆகும். இது முக்கியமாக பின்வரும் தேவைகளுக்காகப் பயன்படுகிறது:

காய்ச்சல் தடுப்பு மற்றும்சிகிச்சையில்டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா மற்றும் சாதாரண வைரஸ் காய்ச்சல்கள் போன்றவற்றைக்குணப்படுத்தவும், உடல் வெப்பத்தைக் குறைக்கவும் இது பயன்படுகிறது.

இரத்த தட்டு அணுக்கள் (Platelets): டெங்கு காய்ச்சலால் குறையும் இரத்தத் தட்டு அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி மூலம் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை (Immunity) பலப்படுத்த உதவுகிறது.

வலி மற்றும் வீக்கம் : ஆகியவற்றை குறைத்திட இதில் உள்ள சுக்கு மற்றும் பிற மூலிகைகள் உடல்வலி,மூட்டு வலி மற்றும் வீக்கத்தைக் குறைக்க உதவுகின்றன.

பசியாமந்தம் மற்றும் செரிமானக்கோளாறுகளைச் சரிசெய்ய உதவுகிறது.என மாணவர்களிடையேஎடுத்துக் கூறி தங்கள் வீட்டிற்கு அருகில் யாருக்கேனும் காய்ச்சல்மற்றும்தொடர் உடல்வலி மற்றும்டெங்குஅறிகுறி ஏற்பட்டால் உடனடியாக நிலவேம்பு கசாயம் அருந்துவதோடு உடனடியாகஅரசு மருத்துவமனை மற்றும் மருத்துவர்களைஅணுக வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்

# மதுரை எல்லிஸ் நகர் பகுதியில் உள்ள மஸ்ஜிதுர் ரஹ்மான் மர்கஸில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் மதுரை மாவட்டத்தின் பொதுக்குழு கூட்டம்



மதுரை எல்லிஸ் நகர் பகுதியில் உள்ள மஸ்ஜிதுர் ரஹ்மான் மர்கஸில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் மதுரை மாவட்டத்தின் பொதுக்குழு கூட்டம்

நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாநில பொதுச் செயலாளர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் மாநிலச் செயலாளர் யாசிர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் அம்ஜத் கான், மாவட்ட செயலாளர் ஜாகிர் உசேன், மாவட்ட பொருளாளர் மன்சூர் அஹமத் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் பொது குழு உறுப்பினர்கள் 200-க்கும் மேற்பட்டோர்கலந்துகொண்டனர், பின்னர் பொது குழுவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, அவைகள்,SIRமுறைகேடுகளில் ஈடுபட்ட தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி விலகக்கோரி டெல்லியில் ஜந்தர் மந்தர் போராட்டத்தில் கலந்துகொள்ள இருந்த இளைஞர்களையும், இளம் பெண்களையும் கடுமையான அடக்குமுறைக்கு உட்படுத்தக்கூடிய டெல்லி காவல்துறையை வன்மையாக கண்டிக்கிறோம், ஜனநாயக ரீதியாக போராடக்கூடிய மக்களின் குரல்வலையை நெரிக்கக் கூடிய வகையில் CJP ன் தலைவர் அபிஜித் தீப்கே, நேஹா போரா, மம்தா பானர்ஜி, ராகுல் காந்தி, அரவிந்த் கேஜ்ரிவால் உள்ளிட்ட பல அரசியல் கட்சிகளியின் தலைவர்கள் கைது செய்து உள்ளார்கள் அதை வண்மையாக கண்டிக்கிறோம், தவறு செய்த ஞானேஷ்குமார் தண்டிக்கப்படுவதற்கு பதிலாக ஜனநாயகவழியில் குரல் கொடுக்கக் கூடியவர்களை ஒடுக்கும் ஒன்றிய பாஜக அரசை வன்மையாக கண்டிக்கின்றோம், தமிழகத்தில் நடந்த SIR க்கு எதிரான போராட்டங்களில் ஆளக்கூடிய தவெக அரசு ஞானேஷ் குமாரை எதிர்க்கும் மாணவர்களின் பக்கம் நிற்பதற்கு பதிலாக ஒன்றிய பாஜக அரசை ஆதரிக்க கூடிய வகையில் பல்வேறு இடங்களில் மாணவர்களை கைது செய்து இருக்கின்றார்கள், அனுமதிக்கப்பட்ட இடங்களில் கூட போராட அனுமதி மறுத்துள்ள தமிழ்நாடு அரசின் செயல் வன்மையான கண்டனத்துக்குரியது,

அரிசி தவிர்த்து மற்ற பொருட்களின் விலைகளும் விண்ணை முட்டும் சூழல் உள்ளது , இதை குறைப்பதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும், சமீபத்தில் வழங்கப்பட்ட நோபல் அமைதி பரிசு தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட தென்னாப்பிரிக்காவை சார்ந்த நவி பிள்ளைக்கு வழங்கப்பட்டு உள்ளது, காஸாவில்நடந்தகொடுமைகளை உலகிற்கு பறைசாற்றிய இவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) யின் நீதிபதியாக பதவி வகித்தார் என்ற காரணத்திற்காக ICC க்கு வழங்கும் நிதியை நிறுத்துவதாக அமெரிக்கஅறிவித்துள்ளது, இது போன்று உலகின் ஒட்டு மொத்த முதலாளியாக செயல்பட்டு கொண்டிருக்கும் அமெரிக்காவை தாண்டி உலக மக்களின் நலன்களை காக்க செயல்படும் UN, ICC,ICJபோன்றஅமைப்புகளை பாதுகாக்க இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் முன்வர வேண்டும், முதலமைச்சர் தமிழகத்தில் ஏற்படும் மின்வெட்டை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் முடுக்கி விட வேண்டும், போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றினர். இந்நிகழ்ச்சியில்

மாவட்ட துணை செயலாளர் அஷ்ரப் அலி (ஊடக தொடர்பாளர்) உடன் உள்ளார்.

# சிறுநெசலூர் பெரிய ஏரியில் கோலாகலமாக நடைபெற்ற மீன்பிடித் திருவிழா!



கடலூர் மாவட்டம், வேப்பூர் அருகே உள்ள சிறுநெசலூர் கிராமத்தில் பெரிய ஏரியில் மீன்பிடித் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது. இத்திருவிழாவை முன்னிட்டு கிராமப்பொதுமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் முன்னிலையில், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மஞ்சுளா வேல்முருகன் பச்சைக்கொடி காட்டி மீன்பிடித் திருவிழாவைத் தொடங்கி வைத்தார்.

சிறுநெசலூர் மற்றும் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, ஏரியில் இறங்கிபல்வேறு வகையான நாட்டு ரக மீன்களைப் பிடித்துச் சென்றனர். குறிப்பாக, கெண்டை, கெளுத்தி, விரால் உள்ளிட்ட மீன்கள் கிடைத்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். கிராம மக்களின் பாரம்பரியத்தையும் ஒற்றுமையையும் பறைசாற்றும் வகையில் நடைபெற்ற இந்த மீன்பிடித் திருவிழாவில், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒன்றுகூடிய கிராம மக்கள், மீன்பிடித்தலை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். இதனால் சிறுநெசலூர் பெரிய ஏரி திருவிழாக் கோலம் பூண்டது.



இன்டர்நேஷனல் விளையாட்டு அரங்கில் நடைபெற்றதுதென்காசி அக்டோபர் 12 வரை தென்காசி மாவட்டத்தில்நடைபெற்றமுதலமைச்சர்கோப்பைக்கானஇறகுப்பந்துபோட்டியில்இரண்டாம்இடம்பிடித்தவீரர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது கடையநல்லூர் இன்டர்நேஷனல் விளையாட்டு அணி சார்பில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டியில் இறகுப்பந்துவிளையாடி இரண்டாம் இடம் பிடித்த விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது கடையநல்லூர் இன்டர்நேஷனல் இறகுப்பந்து உள் விளையாட்டரங்கில் நடைபெற்ற பாராட்டுவிழாவிற்குஇன்டர்நேஷனல்பள்ளிதாளாளர்முகமதுஹபீப்தலைமைதாங்கினார்மாவட்டஅளவில்நடைபெற்ற இறகு பந்து போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற அணி வீரர்கள்அருணாச்சலம் மற்றும் லட்சுமணன் ஆகியோருக்கு இன்டர்நேஷனல் ஸ்போர்ட்ஸ் கிளப் நிர்வாகிகள் மற்றும் வீரர்கள் வாழ்த்து தெரிவித்து சால்வை மற்றும் மெடல் அணிவித்தனர் அதனை தொடர்ந்துபரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது

# கடப்பேரி என் மீட்பர் தேவாலயத்தில் 47வது ஆண்டு விழா மற்றும் ஆலய விரிவாக்க அடிக்கல் நாட்டு விழா



வாலாஜா அடுத்த கடப்பேரி கிராமத்தில் இந்திய சுவிசேஷ திருச்சபை சென்னை பேராயத்தின் கீழ் செயல்பட்டு வரும் என் மீட்பர் தேவாலயத்தின் 47-வது ஆண்டு விழா மற்றும் ஆலய விரிவாக்க அடிக்கல் நாட்டு விழா சிறப்பு ஆராதனையுடன் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்குக் கடப்பேரி ஏரியா இயக்குனர் ஜோசப் ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.

விழாவில் சென்னை பேராயர் கதிரொளிமாணிக்கம் கலந்து கொண்டு சிறப்பு தேவச்செய்தி வழங்கி, ஆலய விரிவாக்கப் பணிகளுக்கான அடிக்கல்லை நாட்டி ஆசீர்வதித்தார்.

இவ்விழாவில் கடப்பேரி சபை போதகர் அன்பு, ஏரியா போதகர்கள், மூப்பர் குழுவினர் மற்றும் திரளான சபை விசுவாசிகள் குடும்பத்துடன் பங்கேற்று சிறப்பித்தனர்.

# சுசீந்திரம்–தேரூர் பறவைகள் பேணுகைப் பகுதியில் அத்துமீறி நுழைந்து பறவைகளை தொந்தரவு செய்து தாமரை மலர்களை பறித்தவர்கள் மீது வழக்குப் பதிவு



கன்னியாகுமரி வனக்கோட்டம் மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் முனைவர் அன்பு இ.வ.ப., அவர்கள் உத்தரவுப்படி உதவி வனப்பாதுகாவலர் மற்றும் உதவி இயக்குநர் திரு.ஸ்ரீவல்சன் அவர்கள் வழிகாட்டுதலின் படி பூதப்பாண்டி வனச்சரக அலுவலர் திரு. அன்பழகன் தலைமையில் திரு. மணிகண்டன் ஆரல்வாய்மொழி வனவர் உள்ளிட்ட பணியாளர்கள் தணிக்கையில் வனச்சரகத்திற்கு உட்பட்ட சுசீந்திரம்-தேரூர் பறவைகள் பேணுகைப் பகுதியில் பறவைகளைத் துன்புறுத்தி, தாமரை இலைகளைப் பறித்தது தொடர்பாக மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பால்குளத்தைச் சேர்ந்த மார்சல், பறக்கை குளத்தைச் சேர்ந்த பாலன், தேரூர் குளத்தைச்சேர்ந்தவிமல் என்பவர்களுக்கு ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் அபராதம் விதிக்கப்பட்டது

பறவைகளைத் துன்புறுத்துதல் மற்றும் தாமரை மலர்களை பறித்தல்போன்றசெயல்கள், பறவைகள் பேணுகைப் பகுதியின் இயற்கைச் சூழலையும், பறவைகளின் வாழ்விடங்களையும் பாதிக்கக்கூடியவை.

எனவே, பறவைகள் பேணுகைப் பகுதிகளில் பறவைகளுக்கு இடையூறு ஏற்படுத்துதல், இயற்கை வளங்களைச் சேதப்படுத்துதல் போன்ற செயல்களில் பொதுமக்கள் ஈடுபடக்கூடாது என வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். மேலும், வனவிலங்குகள் மற்றும் பறவைகளைப் பாதுகாப்பதில் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# யு.பி.ஐ. பண பரிவர்த்தனைக்கு கட்டண விதிப்பை கைவிடக்கோரி வணிகர் சங்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டம்

## மாவட்டத் தலைவர் பிரபாகரன் பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் வணிகர் சங்கம் பேரமைப்பு சார்பில் இந்தியா முழுவதும்

யு பி ஐ டிஜிட்டல் பண பரிவர்த்தனைக்கு வரும் அக்டோபர் 15ஆம் தேதி முதல் 2000 ரூபாய்க்கு மேல் வணிக நிறுவனங்களில் டிஜிட்டல் பணம் பரிவர்த்தனை செய்தால் 0.4 % கட்டணம் வசூலிக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது இதுபோன்று பணப்பரிவர்த்தனை கட்டண விதித்தால் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படுவதாகும் இது வணிகர்கள் விலையற்றத்தை ஊக்குவிக்கும் செயலாகும் ஏற்கனவே அரிசி பருப்பு உள்ளிட்ட அத்தியாவாசியபொருட்களின்விலை உயர்ந்து உள்ளதால் வாடிக்கையாளருகு இது சுமையாக இருக்கும் என்று கூறி பண பரிவர்த்தனைக்கு கட்டணம் விதிப்பைகைவிடக்கோரி தமிழ்நாடு முழுவதும் இன்று பல்வேறு நகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது இதன் ஒரு பகுதியாக மதுராந்தகம் தேரடி பகுதியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



கோவை மாவட்ட ரோட்டரி கிளப் ஆப் அப்டவுன் அமைப்பின் சார்பாக கோவை கணபதி பகுதியில் உள்ள கிருஷ்ணா கவுண்டர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான செஸ் போட்டிகள் நட ந்தது.

# மதுராந்தகம் இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் முதலமைச்சர் விஜய் சந்தித்து வாழ்த்து பெற்றார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் மதசார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டனி தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி மரகதம் குமரவேல் மதுராந்தகம் தொகுதியில் 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் அதனைத் தொடர்ந்துநேற்றுகாலை தலைமைச் செயலகம் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் ஜே.சி.டி பிரபாகரன் . அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் அதனைத் தொடர்ந்து

மாண்புமிகுதமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்களை நேற்று (12.10.2026) தலைமைச் செயலகத்தில், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில்வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுக் கொண்ட திருமதி மரகதம் குமரவேல் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# தேனி மாவட்டம் மீனாட்சிபுரம் பேரூராட்சி 9வது வார்டில் தேங்கியுள்ள கழிவுநீரால் நோய் தொற்று அபாயம்; மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் மற்றும் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சி கோரிக்கை



தேனிமாவட்டம்,போடி மீனாட்சிபுரம் பேரூராட்சிக்குட்பட்ட 9-வது வார்டு பகுதியில் அடிப்படை வசதிகள் எதுவும் செய்யப்படாததால், அப்பகுதி மக்கள் கடந்த சில மாதங்களாக பல்வேறு சிரமங்களை சந்தித்து வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

9-வது வார்டு பொட்டல கலம் பகுதியில் கழிவுநீர் வடிகால் வசதி முறையாக இல்லாததால், வீதிகளிலேயே கழிவுநீர் குளம் போல் தேங்கி நிற்கிறது. இதனால் கொசுக்கள் பெருக்கெடுத்து, காலரா, டெங்கு, மலேரியா போன்ற கடுமையான தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். தெருக்களில்தேங்கும் குப்பைகள் மற்றும் சாக்கடை கழிவுகள் அகற்றப்படாமல் தேங்குவதால் துர்நாற்றம் வீசுவதுடன், விஷப் பூச்சிகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள பல்வேறு பேரூராட்சிகளில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கு முறையாக மாதச் சம்பளம் வழங்கப்படுவதில்லை என்றும், லீவு கணக்கைக் காட்டி சம்பளம் பிடிக்கப்படுவதாகவும் பகிரங்க குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு உள்ளன.

பெயரளவிற்கு ஒப்பந்த அடிப்படையில் வேலை வாங்கும் நிர்வாகம், முறையான பணி நிரந்தரம் செய்யாமல் தொழிலாளர்களை வஞ்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பலமுறை மீனாட்சிபுரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் மனு அளித்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனைக் கண்டித்து, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சியின் மாவட்ட தலைவர் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் நேரில் மனு அளித்து தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். மழை காலம் தொடங்கும் முன்பாக, தேங்கியுள்ள கழிவுநீரை அப்புறப்படுத்தி,தேவையான சுகாதார மற்றும் சாக்கடை வசதிகளை உடனடியாக செய்து தர வேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது.

# ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திவ்யா மணிகண்டனுக்கு ஐந்தாண்டு நிறைவு விழா



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவராகதிவ்யாமணிகண்டன் ஐந்து ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றியதைப் பாராட்டி, அவரது பதவிக்கால நிறைவு விழா மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் வட்டார வளர்ச்சி அலுவலர் முருகேசன், ஆலங்குளம் வட்டாட்சியர் பரமசிவன், வட்ட வழங்கல் அலுவலர் முருகன், வட்ட வருவாய் அலுவலர் பேச்சிமுத்து, வேளாண்மை அலுவலர் சண்முகபிரியா துணை வேளாண்மை அலுவலர் அண்ணாத்துரை உதவி வேளாண்மை அலுவலர்கள் சொரிமுத்து கணேசன் வேளாண்மை தொழில் நூட்ப அலுவலர் ஸ்டான்லி, உதவி தோட்ட கலை அலுவலர் மணிகண்டன் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கந்தசாமி, உஷா , வெள்ளத்துரை,ஊராட்சி ஒன்றியக் குழு துணை தலைவர் செல்வ கொடி ராஜமணி,ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் முரளிராஜா, வாடியூர் அந்தோணிச்சாமி, ஷேக்முகமது, பால்த்துரை, மலர்கொடி கோட்டைச்சாமி, முருகேஷ்வரி பாலகுமார், முத்துமாரி ரமேஷ், கிருஷ்ணவேணி மகேந்திரன், சண்முகராம், கிருஷ்ணம்மாள் வெங்கடேஷ், மீனா சுப்பிரமணியன், சுப்புக்குட்டி, சங்கீதா சுதாகர், பசுபதி திராவிடமணி மேலும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் சந்திரசேகர், பால் விநாயகம், நீதிராஜன், ஆர்.பி. முருகன், பாலசுப்பிரமணியன், ஜெயராணி குமார், பூசத்துரை,வெங்கடேஸ்வரி முருகேசன், முத்துலெட்சுமி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன், முத்துலெட்சுமி மருதுபாண்டி,

உள்ளிட்டோர் பங்கேற்று திவ்யா மணிகண்டனுக்கு சால்வை அணிவித்து நினைவு பரிசுகள் வழங்கிவாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

பின்னர் அவரது ஐந்தாண்டு காலப் பணியைப் பாராட்டிப் பேசினர் இந்த நிகழ்வில் ஒன்றிய அலுவலகப்பணியாளர்கள், ஊராட்சி செயலர்கள், வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத் துறை அலுவலர்கள், அரசு மகளிர் கல்லூரி பேராசிரியர்கள், வருவாய்த் துறையினர், அரசு ஒப்பந்ததாரர்கள் மற்றும்அரசியல் கட்சிப் பிரமுகர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.விழாவின் முடிவில், ஒன்றியக் குழுத் தலைவர் திவ்யா மணிகண்டன் கலந்து கொண்ட அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

# சமூக வளைதங்களில் ரீல்ஸ் வீடியோ பதிவிடும் இஸ்லாமிய பெண்களை ஜமாத்தாரர்கள் கட்டுப்படுத்த வேண்டும் காயல் அப்பாஸ் வேண்டுகோள்



சமூக வளைதங்களில் ரீல்ஸ்வீடியோபதிவிடும் இஸ்லாமிய பெண்களை அப்பகுதியின் ஜமாத்தாரர்கள் கட்டு படுத்த வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வேண்டுகோளை விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தென்காசி மாவட்டம்,கடைய நல்லுரை சேர்ந்த வஹிதா என்ற பெண் தன்னை திருமணம் செய்து கொள்வதாககூறி முத்துக்குமரன் என்பவர் ஏமாற்றிவிட்டதாகவும் முத்துக்குமரன் விவகாரத்துடன் தற்கொலை பண்ணுவதாக கூறி மது மற்றும் சிகரட் பிடிப்பதுபோன்றவீடியோ காட்சிகள் வெளியாகி இஸ்லாமியர்கள் மத்தியில் பெரும் பரப்பை ஏற்படுத்தி வருகிறது.

மேலும், தமிழகத்தில் இஸ்லாமிய பெண்கள் பலரும் சமூக வளைதங்களில் டான்ஸ் - பாடல்களை பாடுவது போல் பல்வேறு ரீல்ஸ் வீடியோக்கள் வெளியிட்டு அதன் மூலம் பேமஸ் ஆகனும் அதிலிருந்து வருமானத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடு இத்தகை செயலை செய்து வருகின்றனர்.

மேலும். இஸ்லாமிய அடையாளமான ஹீஜாப்பை அணிந்து ரீல்ஸ் வீடியோக்களை வெளியிடுகிறோமே இதனால் உறவினர்கள் மற்றும் ஜமாத்தார்கள் நாம் செய்யும் செயலை தவறாக நினைப்பார்களே என்று கொஞ்சம் கூட உணராமல் ரீல்ஸ் வீடியோ மோகத்தால் இஸ்லாமிய மார்க்கத்தின் நெறிமுறைகளை முறையாக கடை பிடிக்காத இஸ்லாமிய பெண்களின்வாழ்க்கைகேள்வி குறியாக மாறி வருவது மிகுந்தவேதனைஅளிக்கிறது.

எனவே : இஸ்லாமிய மார்க்கத்தில் மது ,புகை பழக்கம் ஹராமான செயல்,அப்படி இருக்க இஸ்லாமிய பெண்ணாக இருக்க கூடிய வஹீதா மது, சிகெரட் பிடிப்பது இஸ்லாமிய மார்க்கத்திற்கு எதிரான செயல் இத்தகை செயலை ஒரு போதும் ஏற்று கொள்ள முடியாது. மேலும். வஹீதாவுக்கு ஆதரவாக இஸ்லாமியர்கள் யாரும் பேசவோ,குரல்கொடுக்க வேண்டாம் என தாழ்மையுடன்கேட்டுகொள்கிறோம்.

ஆகவே,சமூக வளைதங்களில்ரீல்ஸ்வீடியோ பதிவிடும் இஸ்லாமிய பெண்களை கண்டறிந்து அப்பகுதியின் ஜமாத்தாரர்கள்,மற்றும் உறவினர்கள் மூலம் அறிவுரைகளை வழங்கி கட்டு படுத்துனால் மட்டுமே இனி வரும் காலங்களில் இஸ்லாமிய பெண்கள் வழி தவறாமலும்,பாதிக்க படாமலும்,பாதுகாக்க முடியும் என்பதைமக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பாக தெரிவித்து கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்

# காலை உணவு திட்டம் மற்றும் மதிய உணவு திட்டம் கண்காணிக்க இரு வேலையும் ஒரே ஆசிரியரை கண்காணிப்பு ஆசிரியாக நியமனம் செய்யும் அறிவிப்பை திரும்ப பெற வேண்டும்

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் கோரிக்கை



ஏற்கனவே அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிறும் மாணவமாணவிகளுக்கு காலை உணவு திட்டம் தொடங்கி நல்லமுறையில் செயல்பட்டு வரும் நிலையில் தற்போது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 6,7 மற்றும் 8ஆம் வகுப்ப வரையிலான மாணவ மாணவிகளுக்கும் விரிவு படுத்தப்பட்டு சென்றசெப்டம்பர் 22ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்கள் தொடங்கிவைத்தார் இத்திட்டத்தை வரவேற்று தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் பாராட்டி நன்றி தெரிவித்தோம் இத்திட்டத்தை கண்காணிக்க சுயற்சி முறையில் ஆசிரியர் ஒருவர் காலை 8.39 மணிக்குள்ளாக வருகைத்தந்து கண்காணிப்பு பணியில் ஈடுப்பட்டு மாணவர்வருகைக்கு ஏற்ப காலை உணவை தான் சாப்பிட்டு சரி பார்த்து பின்பு மாணவர்களுக்கு கவனத்துடன் பரிமாறப்பட்டு உணவு வழங்கப்பட்டு வருகிறது

தற்போது பெருந்தலைவர்காமராசர்காலை உணவு திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் மதிய உணவுத்திட்டத்தை கண்காணிக்க ஆசிரியர் ஒருவரை ( nodal teacher ) பள்ளி அளவில் கண்காணிப்பு ஆசிரியராக நிமிக்க வேண்டும் என்று அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் மதுப்புமிகு நலதா அவர்கள் சுற்றறிக்கை அனுப்பி ( Nodal teacher ) கண்காணிப்பு ஆசிரியரை உடனே நியமிக்க உத்தரவு பிறப்பித்துள்ளார் , ஏற்கனவே மாணவர்கள் தான் படிக்கின்ற பாடத்தை மட்டும் போதித்தால் போதாது வெவ்வேறு தனி திறனில் மேம்பட வேண்டும் என்ற முனைப்போடு தமிழ் மன்றம், இலக்கிய மன்றம் ,ஆங்கில மன்றம் , கணிதம் , அறிவியல் , வினாடி வினா போட்டி , மகிழ் முற்றும் உள்ளிட்ட மன்றங்கள் மூலமாக மாணவர்கள் பொது அறிவில்சிறந்தவரகளாக திகழவேண்டும் என்றும் அதேபோன்று சாரணர் , என்.சி.சி, என்.எஸ்.எஸ் போன்ற திட்டங்களால் நாட்டு நலப் பணிகளில் பங்கெடுத்து மாணவர்கள் தன் ஆர்வத்துடன் செயல் பட்டு பொது நலனில சிறந்து செயலாற்ற வேண்டும் என்று இத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது ஒவ்வொரு திட்டத்திற்கு ஒரு பொறுப்பாசியர் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்

இந்நிலையில் காலை மற்றும் மதிய உணவு திட்டத்தை கண்காணிக்க ஒரு ஆசிரியரை தனியாக நியமிக்க உத்தரவு பிறப்பித்திருப்பது ஒட்டுமொத்த ஆசிரியர்களையும் வருத்தமடைய செய்து உள்ளது, காலை கண்காணிக்கும் ஆசிரியர் மதியமும் கண்காணிப்பு பணியில் ஈடுப்படும்போது அவர் எப்படி மாணவர்களுக்கு பாடம் போதிக்கமுடியும் காலை 8.00 மணிக்கே பள்ளிக்கு வருகைத்தந்து காலை உணவை கண்காணித்து பின்பு காலைவழிபாட்டிற்கு மாணவர்களை ஒழுங்குப்படுத்தி கலந்துக்கொள்ள செய்து ஒரு வினாடி கூட ஓய்வே இல்லாமல் தொடர்ந்து மாணவர்களுக்கு பாடம் நடத்த வேண்டும் அதனை தொடந்து மதிய உணவு திட்டத்தையும் கண்காணித்து அதன் பின்னர் மீண்டும் பாடம் நடத்த வேண்டும் ஒரு ஆசிரியர் தொடர்ந்து சாப்பிட கூட நேரம் இல்லாமல் எப்படி பணியாற்ற முடியும் என தெரியவில்லை , பெரும்பாலான தொடக்கப்பள்ளிகளில் இரு ஆசிரியர்களே பணியாற்றி வருகிறார்கள் இந்த நிலையில் எப்படி மாணவர்களுக்கு போதிக்க இயலும் என்பதை அறிய வேண்டும் , இத்திட்டம் முழுக்க முழுக்க சமூக நலத்துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது அத்துறை சார்ந்தவர்கள் தான் கண்காணிக்கப்பு அலுவலராக நியமிக்கப்பட வேண்டும் , அவர்களுக்கு துணையாக மாணவர்களை ஒழுங்குப்படுத்தி கவனத்துடன் பரிமாறுவதற்கு உதவியாக சுயற்சி முறையில் காலையில் ஒரு ஆசிரியரும் மதியம் ஒரு ஆசிரியரும் கண்காணிக்க பயன்படுத்தவதே சரியானதாக இருக்குமே தவிர , காலை மற்றும் மதியம் என இரு வேலைக்கும் ஒரே அசிரியரை ( nodal teacher ) கண்காணிப்பு ஆசிரியராக நியமிப்பது சரியானதாக இருக்காது எனவே கண்காணிப்பு ஆசிரியர் ( nodal teacher ) நியமன அறிவிப்பை திரும்பபெற பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்மோகன் அவர்களையும் பள்ளிக்கல்வித்துறை செயலாளர் மதிப்புமிகு இன்சன்ட் திவ்யா அவர்களையும் பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் மதிப்புமிகுநலதாஅவர்களையும் தொடக்கக்கல்வி இயக்குநர் மதிப்புமிகு பூ.ஆ.நரேஷ் அவர்களையும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொள்கிறேன்

சா.அருணன் நிறுவனத் தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு

# விடுமுறையில் சிறப்பாகச் செயல்பட்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டு!



தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில்,முதல் பருவ விடுமுறையில் சிறப்பாகச் செயல்பாடுகளை மேற்கொண்ட மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தேவகோட்டை வட்டாரக் கல்வி அலுவலர் குமார் தலைமை தாங்கி, விடுமுறையில் சிறப்பாகச் செயல்பாடுகளை மேற்கொண்ட மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டி வாழ்த்தினார்.

பள்ளித் தலைமையாசிரியர் சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை மாணவி வித்யா வரவேற்றார்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆசிரியைகள் சிவரஞ்சனி, ஆர்த்தி ஆகியோர் செய்திருந்தனர். பள்ளி ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.

# கோவையில் வுல்ஃப்ஸ் பிட்னெஸ் ஃபேக்டரி சார்பில் நடைபெற்ற ஆணழகன் போட்டியில் ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு 5 லட்சம் வரை ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது



கோவைஅவிநாசிரோடு கோல்ட்வின்ஸ் பகுதியில் உள்ள பிருந்தாவன் ஆடிட்டோரியத்தில் மாநில அளவிலான ஐந்தாவது ஆண்டு வுல்ஃப் கிளாசிக் ஆணழகன் போட்டி நடைபெற்றது. குழந்தைகள் மற்றும் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், 55 முதல் 80 கிலோ எடை பிரிவு மற்றும் மாஸ்டர்கள் என நான்கு பிரிவுகளில் போட்டிகள் நடந்தது. சுமார் 2500 முதல் 5000 வரையிலான வீரர், வீராங்கனைகள் போட்டியில் பங்கேற்றனர்.

போட்டியில் பங்கேற்ற வீரர்களிடம் எந்த நுழைவுக்கட்டணமும் வசூலிக்கப்படவில்லை. ஸ்பான்ஷர்களும், விருந்தினர்களும் கூட இல்லாமல் போட்டியில் வெற்றிபெற்றவீரர்களுக்கு அவர்களின் பயிற்சியாளர்களை கொண்டே பரிசுகள் வழங்கப்பட்டது. மாதா, பிதா, குரு மற்றும் மூத்தவர்களை மதிக்க வேண்டிய அவசியத்தை ஜென்சி குழந்தைகளுக்கு கொண்டு செல்லும் விதத்தில் இந்த முறை கடைபிடிக்கப்பட்டது.

தலிடம் பிடித்தவர்கள் வுல்ஃப்ஸ் பிட்னெஸ் ஃபேக்டரி நிறுவனத்தின் பிராண்ட் அம்பாசிடராகவும் அறிவிக்கப்பட்டார்கள். இதன்மூலம், முதலிடம் பிடித்த வீரர்கள் தங்கள் பாடிபில்டிங் வாழ்க்கையை அடுத்த கட்டத்துக்கு எளிதாக கொண்டு செல்ல முடியும். அதற்கு, வுல்ஃப்ஸ் பிட்னெஸ் ஃபேக்டரி நிறுவனம் உறுதுணையாக இருக்கும்.

போட்டியின் ஒருங்கிணைப்பாளர் பாண்டி சக்தி இத் குறித்து செய்தியாளர்களிடம் கூறியதாவது.

இந்தியாவில் ஒரு பாடி பில்டிங் போட்டியில் இவ்வளவு அதிகமான வீரர், வீராங்கனைகள் பங்கேற்றது

இதுதான் முதன்முறை. கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய் செலவில் இந்த போட்டியை நடத்தியுள்ளோம்.ரொக்கப்பரிசு மட்டும் 5 லட்சம் வரை வழங்கியுள்ளோம். பணம் இல்லையென்றாலும் திறமையுள்ள பாடி பில்டர்களை அடையாளம் கண்டுபிடித்து, அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதே எங்கள் நிறுவனத்தின் முதன்மையான நோக்கமாகும். திறமை இருந்தும், பணம் இல்லைஎன்கிறகாரணத்தினால் வீரர்கள் முடங்கி போய் விடக் கூடாது. சோர்வடைந்து விடக் கூடாது. இதற்காகவே, இந்த முயற்சியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம் " என தெரிவித்தார்.



ஈரோடு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கிய பேரணியை, வருவாய் கோட்டாட்சியர் க. முத்துசாமி தொடங்கி வைத்தார். அரசு ஐடிஐ கல்லூரி முதல்வர் மு.சீனிவாசன் தலைமை வகித்தார். இந்தப் பேரணியில் அரசு ஐடிஐ பயிற்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் என 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். பேரணி ஈரோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் தொடங்கி, ஈரோடு ரயில் நிலையத்தில் நிறைவடைந்தது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்தப் பேரணி நடைபெற்றது.

# ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (12.10.2026) நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, ஆதார் கார்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தார்சாலை, மகளிர் உரிமைத்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை,வேலைவாய்ப்பு, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு,தெருவிளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் எனமொத்தம்310மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

நேற்றைய தினம், பணிக்காலத்தில் எதிர்பாராதவிதமாக மரணமடைந்த 3 கிராம உதவியாளர்களின் வாரிசுதார்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) ரமேஷ்,மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜாகீர் உசேன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சங்கர் கணேஷ் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பணிக்காலத்தில்எதிர்பாராதவிதமாகமரணமடைந்தகிராமஉதவியாளர்களின்வாரிசுதார்களுக்குகருணைஅடிப்படையில் பணி நியமனத்திற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (12.10.2026) வழங்கினார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்குவாஷ் வீராங்கனை ஷமீனா ரியாஸ் , இங்கிலாந்தில்உயர்தரப்பயிற்சிமேற்கொள்வதற்காகரூ.10இலட்சத்திற்கானகாசோலையினைமாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன் சார்பில் நேற்று (12.10.2026) வழங்கினார்.

# நந்தா அலைட் ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் முதலாமாண்டு துவக்க விழா



ஈரோடு நந்தா அலைட் ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் 10ஆம் கல்வியாண்டிற்கான முதலாமாண்டு மாணவர்களின் வரவேற்பு விழா இனிதே நடைபெற்றது. இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

மேலும், இவ்விழாவில் ஈரோடு மாவட்ட சுகாரத்துறை இணை இயக்குனர் ஜெயந்தி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையேற்று சிறப்புரையாற்றுகையில், இக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு தேவையான 10க்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார். இத்துறைகளுக்கு தேவையான பயிற்சிகளை நந்தா மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனை மூலமாக முழுமையான முறையில் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், கல்லூரி வாழ்க்கைஎன்பதுவாழ்வில் ஆளுமையினை மேம்படுத்துவதற்கு பெறப்படும் கல்வியினை கற்பதற்கான முக்கியமான காலம் என்றார். ஆதலால் இத்தகைய காலத்தினை சரியாகப் பயன்படுத்தி, தங்களது திறமைகளை மேம்படுத்தி எதிர்கால வாழ்விற்கு வெற்றிக்கு வித்திடுங்கள் என்று கூறிபுதியதாகஇணைந்த மாணவ மாணவிகளுக்கும், அவர்தம் பெற்றோர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

முன்னதாக விழாவில் கலந்து கொண்ட மாணவர்களையும் அவர்தம் பெற்றோர்களையும் கல்லூரியின் முதல்வர் மருத்துவர் வி. மணிவண்ணன் வரவேற்று பேசினார்.

சிறப்பு விருந்தினர் இணை இயக்குனர் ஜெயந்தி பல்வேறு சிறுகதைகள் மூலம் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தி அறிவுத்திறனை பெறுவதற்கான வழிகளைக் கூறியும் சிறப்புரையாற்றியும் மாணவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மேலும், இவ்விழாவில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப் மற்றும் எஸ்.திருமூர்த்தி ஆகியோர் மாணவ, மாணவியர்களை வாழ்த்திப் பேசினார்கள். இவ்விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குகல்லூரிநிர்வாகத்தினர்கள் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.



ஈரோடுமாவட்டஆட்சியர்அலுவலகவளாகத்தில்சர்வதேசபெண்குழந்தைகள்தினத்தினைமுன்னிட்டுவிழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தலைமையில் நேற்று (12.10.2026) அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

## கோவை மாவட்டம் பேரூர் அடுத்த பச்சா பாளையம் பகுதியில் உலக சாதனை நிகழ்வு

# 2000 பெண்கள் சுமார் 30 நிமிடங்களில், தையல் கலை, அழகு கலை, ஆரி வேலைகளை செய்து அசத்தி சாதனை பக்கத்தில் இடம் பிடித்து அசத்தியுள்ளனர்



கோவை மாவட்டம் பி. கே. புதூர் பகுதியில், ஸ்ரீ ராமசாமி கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை மற்றும் எஸ்.ஆர்.எம் இன்ஸ்டிடியூட், எஜிகேஷனல் மற்றும் சாரிட்டபிள் ட்ரஸ்ட் என்ற அமைப்பு கடந்த 6 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்த அறக்கட்டளை சார்பாக பல்வேறு பெண்களுக்கு சுய தொழில், மற்றும சுய முன்னேற்ற பயிற்சிகள் இலவசமாக வழங்கபட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கோவை பேரூர் அடுத்த பச்சா பாளையம் பகுதியில் மகளீர் வாழ்வாதாரத்திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழா தனியார் திருமண அரங்கில் நடைபெற்றது. டாக்டர் மகேஷ்வரி சிவபிரகாசம் ஒருங்கினைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சுமார் 2000 த்திற்கும் மேற்பட்ட பெண்கள், கலந்து கொண்டனர். இதில் பயிற்சி பெற்ற 2000 மகளீர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், 2000 பெண்கள் சுமார் 30 நிமிடங்களில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி சாதனை பக்கங்களிலும் இடம் பிடித்தனர். இவர்களது திறனை ஆய்வுசெய்த இன்டர்நேஷனல் வேர்ல்டு ரெக்கார்ட்ஸ் க்ரோனிக்கல் என்ற அமைப்பு இவர்களது சாதனையை ஏற்று சான்றிதழ்களும் வழங்கி பெருமை படுத்தியது. இதனை

தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்துபேசிய மகேஸ்வரி சிவபிரகாசம் கூறியதாவது..

சுயதொழில் முன்னேற்றத்திற்கான வழிகாட்டல் மற்றும் வருமான உயர்வு குறித்த சிறப்பு ஆலோசனைகள் இந்த முகாமில் கலந்து கொண்ட பெண்களுக்கு வழங்கப்பட்டதாகவும், மகளிர்தொழில் முனைவோர்களுக்கான அரசு நலத்திட்டங்கள், மற்றும் நிதி உதவி திட்டங்கள், குறித்து இங்கு கலந்து கொண்ட எடுத்துரைக்கப்பட்டதாகவும், 2000 மகளிர்களின் பிரம்மாண்ட உலக சாதனை நிகழ்வும், இந்த மேடையில் நடைபெற்றதாக தெரிவித்தார். மேலும் பெண்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அவர்களின் திறன்களை அறிந்து, அவர்களுக்கு சுய தொழில், அல்லது சுய வேலைவாய்ப்பு சேவைகளை வழங்கும் திட்டங்களை எங்களது அமைப்பின் சார்பாக வழங்கி வருகின்றதாகவும்தெரிவித்தார்.பெண்களின் முன்னேற்றத்திற்காக கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மகளீர்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றதாகவும், இதில் தையல் பயிற்சி, ஆரி வேலைகள், டிசைன் வேலைகள், அழகு கலை பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளும் இலவசமாவகே வழங்கி வருகின்றதாகவும் தெரிவித்தார். இங்கு நடைபெற்ற இந்தநிகழ்ச்சியில்,கடந்த மூன்று முதல் 6 மாத காலங்களில் 2000 மகளிர்கள் இத்தகைய பயிற்சிகளை முறையாக கற்று கொண்டுள்ளனர். அவர்கள் கற்று கொண்டதை உறுதி படுத்தும் வகையில், அவர்களுக்கு இன்று சான்றுகள் வழங்கபட்டது என்று தெரிவித்தார்.

# கோவை பட்டணம் பகுதியில், "கார்ஸ் 327" நிறுவனம் சார்பில் யூஸ்டு கார்கள், 2வது விற்பனை மாநாடு பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது



கோவையில் யூஸ்டு கார் வாங்க திட்டமிடுபவ ர்களுக்கு பயனளிக்கும் வகையில், 500"க்கும் மேற்பட்ட பயன்படுத்தப்பட்ட கார்கள் ஒரே இடத்தில் இடம்பெறும் 11-வது மாபெரும் Used Cars மாநாடு நடைபெற உள்ளது.

கார்ஸ் 327" நிறுவனத்தின் சார்பில் வருகின்ற நவராத்திரி ,ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, யூஸ்டு கார்கள் இரண்டாவது மாநாடு, விற்பனை திருவிழா அக்டோபர் 9 முதல் 18-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. காலை 9.30 மணி முதல் இரவு 8 மணி வரை, கோவை பட்டணம் பகுதியில் உள்ள எல் அன்ட் டி பைபாஸ், அமைந்துள்ள "கார்ஸ்327" வளாகத்தில் இந்த மாநாடு நடைபெறுகிறது. பல்வேறு வகையான பயன்படுத்தப்பட்ட கார்களை ஒரே இடத்தில் பார்வையிட்டு, தங்களது தேவைக்கும் பட்ஜெட்டுக்கும் ஏற்ற காரை தேர்வு செய்யும் வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், கார்களை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு பரிசுகள், சிறப்பு சர்விஸ் சலுகைகளும் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குடும்பத்துடன் நேரில் சென்று கார்களை பார்வையிட்டு, விலை மற்றும் வசதிகளை ஒப்பிட்டு, தங்களுக்கு ஏற்ற காரை தேர்வு செய்ய அமையும் என கார்ஸ் 327 நிறுவனர் விஷ்ணு வேணுகோபால் தெரிவித்தார்.

# Saudi Arabia can fund a long war against Houthis, but can't defeat them: Where the military power stands

*As the conflict between Saudi Arabia and the Houthis continues to escalate, certain reports have surfaced, which claim that while Riyadh can afford a war with the Yemeni militant group, it may not be enough to defeat them.*

*In the latest development, the Houthis struck Saudi Arabia's King Khalid International Airport in Riyadh, killing at least 13 people and injuring 309. This strike also marked a major escalation in the conflict between the two rivals. As per the defense economics researcher, Military Spend, Saudi Arabia spent around $83.2 billion on its military in 2025, marking the world's eighth-largest defence budget.*

*While the exact figure for the Houthis remains unknown, as per an Al Jazeera report, the militant group's total revenue amounts to $2.5 billion from taxation and another two billion in illicit oil sales. Despite having the air-power, Saudi Arabia has turned to*



*the United States, with Crown Prince Mohammed bin Salman reportedly calling US President Donald Trump twice, urging Washington to strike the Houthis directly.*

*While Trump declined to launch, Washington agreed to provide intelligence and targeting support.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.